22.09.2025



மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், துறையூர்.

அசல் வழக்கு எண்.182/2023

வா.சா. 2–குணசேகரன், த/பெ.சீனிவாசன்

சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டது

பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி

20.05.1959 ம் ஆண்டு என்னுடைய தாத்தா மல்லமுத்து கிரையம் வாங்கிய சொத்து வா.சா.ஆ.6 ஆவணத்தில் முத்தையம்பாளைய கிராம சர்வே எண்.224/2 – 1 ஏக்கர் 20 செண்ட் நிலம் வாங்கியுள்ளார், இந்த நிலத்திற்கு பாதையாக சர்வே எண்.224/4 ல் வடபுறம் கோடியில் பாதை பாத்தியம் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். என்னுடைய சித்தப்பா தங்கராஜ்–க்கு பாகபாத்தியம் மூலம் கிடைத்த சொத்திற்கு செல்லக்கூடிய வண்டி வகை பாத்தியம் என்பது சர்வே எண்.198/14 பி–ல் உள்ளது என்று சொன்னால் சரிதான். என்னுடைய சித்தப்பா தங்கராஜ் என்னுடைய தகப்பனாருக்கு எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் வா.சா.ஆ.5 ஆவணத்தில் கண்ட சொத்து விவரத்திற்கு தாவா பி அட்டவணை சொத்து சர்வே எண்.198/14 பி வழியாக வண்டி பாதை போகலாம் என கண்டு கிரையம் கொடுத்துள்ளார் என்று சொன்னால்

22.09.2025



சரிதான். எனக்கு தமிழ் ஓரளவு தான் படிப்பேன். கற்றறிந்த வாதி வழக்கறிஞர் வா.சா.ஆ.5 ஆவணத்தில் மாமூல் பாதை பாத்தியம் உட்பட என பொதுவாக தான் எழுதியுள்ளார்கள், தாவா பி அட்டவணை சொத்து வழியாக செல்லலாம் என குறிப்பிட்டு எழுதவில்லை என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. என்னுடைய தாத்தா மல்லமுத்துராஜா கிரையம் வாங்கியதிலிருந்து என் சித்தப்பா தங்கராஜ், என் தகப்பனார் சீனிவாசன் ஆகியோர் மூவரும் ஒரு காலத்திலும் தாவா பி அட்டவணை சொத்து வழியாக பாதையாக செல்லவில்லை, சர்வே எண்.224/4ல் உள்ள நிலத்தில் வடபுறம் கோடியில் பாதையாக பயன்படுத்தினார்கள் என்று சொன்னால் சரியல்ல. தாவா பி அட்டவணை சர்வே எண்.198/14பி சொத்தில் பிரதிவாதி தகப்பனார் சுப்பிரமணி பெயரில் பட்டா இருந்தது, இந்த பட்டாவை ரத்து செய்யச்சொல்லி என் தகப்பனார் வட்டாட்சியரிடம் 2018ம் ஆண்டு மனு கொடுத்தார்கள் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. 31.08.2018ம் தேதி நானும், என் தகப்பனாரும் துறையூர் வட்டாட்சியர் விசாரணைக்கு ஆஜராகி, எனது தரப்பு ஆவணங்களையும், பிரதிவாதி தரப்பு ஆவணங்களையும் பரிசீலித்து எங்களுக்கு உரிமை கிடையாது, பிரதிவாதி தகப்பனார் சுப்பிரமணிக்கு தான் உரிமை உண்டு என உத்தரவிட்டார்

என்று சொன்னால் அங்கு நான் செல்லவேயில்லை, அது பற்றி எனக்கு தெரியாது, நான் தவறாக சொல்கின்றேன், 31.08.2018 அன்று தாசில்தார் விசாரணைக்கு ஆஜரானேன் என்று சொன்னால் சரியல்ல. 2018−2019ம் ஆண்டுகளில் தான் தாவா பி அட்டவணை சொத்தில் நாங்கள் பாதை புதியதாக அமைக்க முயற்சி செய்தோம், அதை வாதி தடுத்து விட்டார் என்று சொன்னால் சரியல்ல. எனக்கும், பிரதிவாதிக்கும் அடிதடி தகராறு ஏற்பட்டு, எனக்கு அடியாட்களாக வந்த சொரத்தூரை சேர்ந்த ரெங்கராஜ் மற்றும் என் மீதும் பிரதிவாதியை அடித்து மண்டை உடைத்தது சம்மந்தமாக துறையூர் காவல் நிலையத்தார் குற்ற வழக்கு பதியப்பட்டு, அதன் மீது எங்கள் இருவரையும் துறையூர் காவல் நிலையத்தார் கைது செய்து நான்கு நாட்கள் சிறைச்சிலையில் சிறைவாசம் அனுபவித்தோம் என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.2 கிரையாவணத்தில் சர்வே எண்.198/14பி வழியாக பாதை பயன்படுத்தலாம் என எழுதிக்கொடுத்தேன் என்று சொன்னால் சரிதான். நான் தவறாக சொல்கின்றேன், நான் எழுதிக்கொடுத்த கிரையாவணம் வா.சா.ஆ.2 கிரையாவணத்தில் சர்வே எண்.198/14பி வழியாக பாதையாக பயன்படுத்தி கொள்ளலாம் என எழுதிக்கொடுக்கவேயில்லை என்று சொன்னால் சரியல்ல.

22.09.2025



வா.சா.ஆ.2 ஆவணத்தில் நான் எழுதிக்கொடுத்த பாதை பாத்தியமானது வழக்கம் போல் வண்டி வாகனங்கள், ஆள், கால்நடைகள் போய்வரக்கூடிய பாதை பாத்தியம் என தான் எழுதிக்கொடுத்துள்ளேன், எத்தணை அடி அகல நீளம் என குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணம் நான் வாதிக்கு கிரையம் கொடுத்த நிலத்திற்கு வடபுறம் யாருடைய நிலம் உள்ளது என்றால் யாருக்கும் சொந்தமான நிலம் இல்லை, ரோடு தான் உள்ளது. என்னுடைய நிலத்திற்கு வடபுறம் கிழமேலாக வாரி செல்கிறதா என்றால் இல்லை. இந்த வழக்கிற்கு பிறகு என்னுடைய தோட்டத்திற்கு சென்று பார்த்தீர்களா என்றால் நான் கிரையம் கொடுத்துவிட்டதால் நான் சென்று பார்க்கவில்லை. நான் கிரையம் கொடுத்த என்னுடைய நிலத்திற்கு வடபுறத்திலும், தாவா பி அட்டவணை சொத்திற்கு உண்டான பாதையாக சொல்லப்படும் நிலத்திற்கு தென்புறத்திலும் இடையில் 3, 4 செண்ட் காலிஇடம் உள்ளது என்றால் சரியல்ல. தாவா பி அட்டவணை சொத்து சர்வே எண்.198/14 பி தென்புறத்திலும், நான் கிரையம் கொடுத்த என்னுடைய நிலத்திற்கு வடபுறத்திலும் இடைப்பட்ட 3 ½ செண்ட் நிலத்தில் தான் பிரதிவாதி தகப்பனார் காலத்திலும், நாளது தேதி வரை பிரதிவாதி ஆடு மாடுகளை கட்டியும், குப்பைக்குழி அமைத்தும் அனுபவம் செய்து வருகிறார்

என்று சொன்னால் நான் அந்த சொத்தின் அருகாமையில் இருந்த வரை அவ்வாறு கிடையாது. சர்வே எண்.198/14 பி நிலத்திற்கு நாளது தேதி வரை பிரதிவாதி பெயரில் பட்டா உள்ளது என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதியின் தகப்பனார் சுப்பிரமணி பிரதிவாதிக்கு எழுதிவைத்த தானசெட்டில்மெண்ட் ஆவணத்திலும் சர்வே எண்.198/14 பி பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என தான் குறிப்பிட்டுள்ளார் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா பி அட்டவணை சொத்து அரசாங்கத்திற்கு பாத்தியப்பட்ட சொத்து அல்ல, பிரதிவாதிக்கு மட்டும் பாத்தியப்பட்ட தனிப்பட்ட சொத்து, அதில் யாரும் உரிமை கோர முடியாது என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய தாத்தா மல்லன்முத்துராஜா மற்றும் என் சித்தப்பா தங்கராஜ், என் தகப்பனார் சீனிவாசனுக்கு எழுதிக்கொடுத்த கிரையாவணத்திலோ அல்லது நான் வாதிக்கு எழுதிக்கொடுத்த கிரையாவணத்திலோ சர்வே எண்.198/14 பி பாதை பாத்தியம் தான் என குறிப்பிட்டு நீள அகலம் என தெளிவுபட குறிப்பிட்டு கொடுக்கவில்லை என்று சொன்னால் சரிதான். நான் தாக்கல் செய்த என்னுடைய சத்திய பிரமாண வாக்குமூலத்தில் உள்ள அனைத்து சங்கதியும் பொய்யான சங்கதி, வாதி சொன்னதிற்கு ஏற்ப நான் வழக்கிற்கு அனுசரணையாக பொய் சாட்சியம்

22.09.2025



அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் தாவா பி அட்டவணை சொத்து சர்வே எண்.198/14 பி என்ற சொத்தை அனுபவிக்க முடியவில்லை என்பதால் தான் நான் வா.சா.ஆ.5 கிரையாவணம் வாதிக்கு எழுதிக்கொடுத்து வாதிக்கு அனுசரணையாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

/உண்மை நகல்/
ஒம்/-திரு.தி. அன்பு,
மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
துறையூர்.